No. of Printed Pages : 23

1282567

**5668**

பதிவு எண்
Register Number

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

# PART - III
# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Versions)

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

Time Allowed : 3 Hours ] [Maximum Marks : 200

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use Black or Blue ink to write and pencil to draw diagrams.

## பகுதி - அ / PART - A

**குறிப்பு :** **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **30x1=30**

**Note :** Answer **all** the questions.

**I.** கோடிட்ட இடங்களை நிரப்புக :
Fill in the blanks :

**1.** முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் இருப்பு நிலைக் குறிப்பின் __________ பக்கத்தில் தோன்றும்.
Prepaid expenses are shown on the __________ side of the Balance Sheet.

**2.** இருப்புநிலைக் குறிப்பில் தேய்மானம் குறிப்பிட்ட __________ லிருந்து கழித்து காட்டுதல் வேண்டும்.
Depreciation is deducted from the concerned __________ in the Balance Sheet.

[ திருப்புக / Turn over

3. 1.04.2004 அன்றைய இருப்பாய்வின்படி வங்கிக்கடன் ₹ 10,00,000, வட்டி வீதம் ஆண்டுக்கு 10%. வட்டி செலுத்தியது ₹ 60,000, 31.03.2005 அன்று நிலுவையில் உள்ள வட்டி ₹ __________.

As per trial balance as on 1.04.2004, the Bank Loan ₹ 10,00,000, rate of interest 10% per annum. Interest paid ₹ 60,000, interest outstanding is ₹ __________ as on 31.03.2005.

4. நிலை அறிக்கை முறை __________ முறை எனவும் அழைக்கப்படும்.

Statement of affairs method is also called as __________ method.

5. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் ₹ 60,000. முதல் ₹ 45,000. அந்நிறுவனத்தின் பொறுப்புக்கள் ₹ __________ ஆகும்.

A firm has Assets worth ₹ 60,000. Capital ₹ 45,000. Then its liabilities are ₹ __________.

6. ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் மொத்த அடக்கவிலை மீது தேய்மானம் கணக்கிடும் முறை __________ முறை என அழைக்கப்படும்.

__________ method of depreciation is calculated on the original cost of assets.

7. விடு கருவிகள் போன்ற சொத்துக்கள் மீது தேய்மானம் நீக்குவதற்கு ஏற்ற முறை __________ முறையாகும்.

__________ method of depreciation is suitable for special type of assets like loose tools.

8. வங்கி மேல் வரைப்பற்று __________ பொறுப்புக்கு ஒரு உதாரணம்.

Bank overdraft is an example for __________ liability.

9. விற்பனை ₹ 3,50,000, பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 1,75,000 எனில் முதல் விற்பனை விகிதம் __________ ஆகும்.

Sales ₹ 3,50,000, capital employed ₹ 1,75,000. Then the capital turnover ratio is __________.

10. ரொக்கத் திட்டப் பட்டியல் தயாரிக்க __________ முறைகள் உள்ளன.

There are __________ methods by which a cash budget is prepared.

11. கூட்டாளிகளின் முதல் கணக்குகள் __________ அல்லது மாறுபடும் முதலாக இருக்கும்.

The capital accounts of partners may be __________ or fluctuating.

12. பதிவு பெறா பொறுப்பை ஏடுகளில் கொணர்வது __________ இனமாகும்.

When unrecorded liability is brought into books, it results in __________.

13. கூட்டாளி விலகலின் போது தொழிலின் மறுமதிப்பீட்டு இலாபம் __________ கூட்டாளிகளாலும் பகிரப்படும்.

On retirement, the profit on revaluation of business will be shared by __________ partners.

14. காப்பு முதல் __________ போது மட்டும் வெளியிடப்படும்.

Reserve capital can be issued only at the time of __________.

15. இரு அழைப்புகளுக்கு இடையே இருக்க வேண்டிய கால இடை வெளி __________ ஆகும்.

There should be a gap of __________ between two calls.

II. **சரியான** விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

Choose and write the **correct** answer :

16. கூடியுள்ள வட்டி __________ ஆகும்.

(அ) வருமானம் (ஆ) சொத்து (இ) பொறுப்பு

Accrued interest is :

(a) an income (b) an asset (c) a liability

**17.** 2005 மார்ச் 31 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ₹ 30,800. வராக்கடன் ₹ 800 போக்கு எழுதப்படவேண்டும். 5% வீதம் வாரா ஐயக்கடன் ஒதுக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை __________ ஆகும்.

(அ) ₹ 1,540 (ஆ) ₹ 1,500 (இ) ₹ 1,000

The trial balance as on 31.3.2005 shows sundry debtors as ₹ 30,800. Write off ₹ 800 as bad debts. The amount of provision for bad and doubtful debts at 5% will be :

(a) ₹ 1,540 (b) ₹ 1,500 (c) ₹ 1,000

**18.** கடன் விற்பனையை அறிய உதவும் கணக்கு :

(அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு

(ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு

(இ) செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டு கணக்கு

Credit sales is obtained from :

(a) Total debtors account

(b) Total creditors account

(c) Bills payable account

**19.** ஒரு நிறுவனத்தின் மொத்த விற்பனை ₹ 80,000 அதன் கடன் விற்பனை ₹ 60,000 எனில் ரொக்க விற்பனை __________ ஆகும்.

(அ) ₹ 20,000 (ஆ) ₹ 1,40,000 (இ) ₹ 70,000

A firm's total sales is ₹ 80,000 and its credit sales is ₹ 60,000 then its cash sales is :

(a) ₹ 20,000 (b) ₹ 1,40,000 (c) ₹ 70,000

**20.** தேய்மானம் ஏற்படுவது :

(அ) சொத்து தேய் வடைவதால்

(ஆ) சொத்தின் சந்தை விலை குறைவதால்

(இ) பணத்தின் மதிப்பு குறைவதால்

Depreciation arises due to :

(a) Wear and tear of the asset

(b) Fall in the market value of asset

(c) Fall in the value of money

**21.** ₹ 15,000 மதிப்புள்ள நிலைச்சொத்தின் மீது ஆண்டுக்கு 10% குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டால் முதல் மூன்று ஆண்டுகளுக்கு நீக்கப்படும் தேய்மானத் தொகையின் மொத்தம் :

(அ) ₹ 4,635 (ஆ) ₹ 4,065 (இ) ₹ 4,506

Total amount of depreciation provided on the written down value method at the rate of 10% p.a. of ₹ 15,000 for first three years will be :

(a) ₹ 4,635 (b) ₹ 4,065 (c) ₹ 4,506

**22.** மொத்த இலாப விகிதத்தில் உள்ள உறவு முறை :

(அ) மொத்தம் லாபம் மற்றும் மொத்த விற்பனை

(ஆ) மொத்த லாபம் மற்றும் கடன் விற்பனை

(இ) மொத்த இலாபம் மற்றும் ரொக்க விற்பனை

Gross profit ratio establishes the relationship between :

(a) Gross profit and total sales

(b) Gross profit and credit sales

(c) Gross profit and cash sales

**23.** அனைத்து இலாபத்தன்மை விகிதங்களும் __________ ஆக கொடுக்கப்படும்.

(அ) விகிதாச்சாரம் (ஆ) மடங்கு (இ) சதவீதம்

All profitability ratios are expressed in terms of :

(a) Proportion (b) Times (c) Percentage

**24.** திட்டப்பட்டியல் என்பது __________ காலத்திற்கான மதிப்பீடு ஆகும்.

(அ) எதிர் (ஆ) நடப்பு / நிகழ் (இ) கடந்த

Budget is an estimate relating to __________ period.

(a) Future (b) Current (c) Past

**25.** முதல் மீது வட்டி கணக்கிடப்படுவது :

(அ) தொடக்க முதல் (ஆ) இறுதி முதல் (இ) சராசரி முதல்

Interest on capital is calculated on the :

(a) opening capital (b) closing capital (c) average capital

26. புதிய கூட்டாளி சேர்க்கையில் __________ கணக்கிடப்படுகிறது.

(அ) ஆதாய விகிதம் (ஆ) முதல் விகிதம் (இ) தியாக விகிதம்

At the time of admission of a partner _________ should be found out.

(a) gaining ratio (b) capital ratio (c) sacrificing ratio

27. கூட்டாளிகளிடையே குறிப்பிட்ட ஒப்பந்தம் ஏதும் இல்லாத பொழுது கூட்டாளிகளின் கடன் மீது ஆண்டிற்கு _______ சதவீதம் வட்டி வழங்கப்படும்.

(அ) 6% (ஆ) 10% (இ) 12%

In the absence of any specific agreement, partner's loan to the firm will carry an interest of :

(a) 6% p.a. (b) 10% p.a. (c) 12% p.a.

28. ஒரு நிறுமத்தின் பங்கு வெளியீட்டு விலை முகமதிப்பிற்கு அதிகமாக இருக்குமானால் அதனை __________ என்று அழைக்கலாம்.

(அ) முகமதிப்பில் வெளியிடுதல்

(ஆ) முனைமத்தில் வெளியிடல்

(இ) தள்ளுபடியில் வெளியிடுதல்

When a company issues shares at a price higher than the face value it is called as :

(a) issue at par

(b) issue at premium

(c) issue at discount

29. இருப்பு நிலைக்குறிப்பில் முதலினக் காப்பு __________ பக்கம் தோன்றும்.

(அ) சொத்துக்கள் (ஆ) பொறுப்புகள் (இ) இரண்டு பக்கமும்

Capital reserve is shown on _________ side of the Balance Sheet.

(a) asset (b) liability (c) both

30. பங்குகளை நிறுமம் ஒறுப்பிழப்பு செய்யும்போது அந்நிறுமத்தின் பங்கு முதல் __________ .

(அ) அதே நிலையில் இருக்கும் (ஆ) அதிகரிக்கும் (இ) குறையும்.

When shares are forfeited the share capital of the company will :

(a) remain same (b) increase (c) reduce

## பகுதி - ஆ / PART - B

குறிப்பு : (i) எவையேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். **10x5=50**

(ii) கருத்தியல் சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **50** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும்.

**Note :** (i) Answer **any ten** questions.

(ii) Answer to theory questions should **not** exceed **50** words each.

**31.** கொடுபட வேண்டிய செலவு என்றால் என்ன ?

What are Outstanding Expenses ?

**32.** நிலை அறிக்கை என்றால் என்ன ?

What is statement of affairs ?

**33.** எறி மதிப்பு என்றால் என்ன ?

What is Scrap or Residual value ?

**34.** விகிதம் - வரைவிலக்கணம் தருக.

Define Ratio.

**35.** ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிக்க பயன்படுத்தும் முறைகள் யாவை ?

What are the methods used for the preparation of Cash Budget ?

**36.** ஆதாய விகிதம் என்றால் என்ன ?

What is Gaining Ratio ?

**37.** பங்கு ஒறுப்பிழப்பு என்றால் என்ன ?

What is forfeiture of shares ?

**38.** இயந்திரத்தின் மீது தேய்மானம் ₹ 25,000 சரிக்கட்டுப்பதிவு மாற்றுப்பதிவு தருக.

Give adjusting entry and transfer entry for Depreciation on machinery ₹ 25,000.

**39.** விடுபட்ட தகவலை காண்க :

| | ₹ |
|---|---|
| அவ்வாண்டில் பெற்ற லாபம் | 5,000 |
| இறுதி முதல் | 12,000 |
| அவ்வாண்டில் இட்ட கூடுதல் முதல் | 4,000 |
| எடுப்புகள் | 2,400 |
| தொடக்கமுதல் | ? |

Calculate the missing figure :

| | ₹ |
|---|---|
| Profit made during the year | 5,000 |
| Capital at the end | 12,000 |
| Additional capital introduced | 4,000 |
| Drawings | 2,400 |
| Opening capital | ? |

**40.** பின்வரும் விவரங்களைக் கொண்டு நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் கணக்கிடுக:

| | |
|---|---|
| சொத்தின் அடக்க விலை | ₹ 1,20,000 |
| எறி மதிப்பு | ₹ 12,000 |
| பயனளிப்புக் காலம் | 10 ஆண்டுகள் |

From the following particulars, find out the rate of depreciation under Straight Line Method :

| | |
|---|---|
| Cost of fixed Assets | ₹ 1,20,000 |
| Residual value | ₹ 12,000 |
| Estimated life | 10 years |

41. பின்வரும் விவரங்களைக் கொண்டு சரக்கிருப்பு விற்பனை விகிதத்தை கணக்கிடுக.

| | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,00,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 1,50,000 |
| கொள்முதல் | 4,75,000 |

From the following, determine the stock-turnover ratio :

| | ₹ |
|---|---|
| Opening stock | 2,00,000 |
| Closing stock | 1,50,000 |
| Purchase | 4,75,000 |

42. நிறுவனத்தின் நற்பெயர் கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபங்களின் மூன்று ஆண்டுக் கொள்முதல் என மதிப்பீடு செய்யப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளின் இலாப நட்டங்கள் : முதல் ஆண்டு லாபம் ₹ 50,000. இரண்டாம் ஆண்டு லாபம் ₹ 80,000. மூன்றாம் ஆண்டு நட்டம் ₹ 30,000 - நான்காம் ஆண்டு லாபம் ₹ 60,000. நற்பெயர் மதிப்பைக் கண்டு பிடிக்க.

Calculate the amount of goodwill on the basis of three years purchase of the last four years average profits. The profits for the last four years are : First year profit ₹ 50,000. Second year profit ₹ 80,000. Third year loss ₹ 30,000. Fourth year profit ₹ 60,000.

43. ரவி, ராஜா என்ற கூட்டாளிகள் 7 : 3 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் சமமாகத் தியாகம் செய்து $\frac{1}{5}$ கூட்டுக்கு ராஜேஷ் என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். அவர்களின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடுக.

Ravi and Raja are partners sharing profits in the ratio of 7 : 3. They admit Rajesh into the partnership to $\frac{1}{5}$th share, the old partners sacrificing equally. Calculate the new profit ratio.

44. X வரையறு நிறுமம் ₹ 10 வீதம் 40,000 பங்குகளை தலா ₹ 3 முனைமத்தில் ரொக்கத்திற்கு வெளியிட்டது. வெளியிடப்பட்ட அனைத்துப் பங்குகள் மீதும் அனைத்து தொகையும் பெறப்பட்டது. உரிய குறிப்பேட்டுப் பதிவினை தருக.

X Ltd. Company issued 40,000 shares of ₹ 10 each for cash at a premium of ₹ 3 per share. All cash was received for all the shares issued. Pass journal entry.

[ திருப்புக / Turn over

## பகுதி - இ / PART - C

குறிப்பு : (i) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். இவற்றுள் **45-வது** வினாவிற்கு **கட்டாயம்** விடையளிக்க வேண்டும். 5x12=60

(ii) கருத்தியல் சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **150** வார்த்தைகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும்.

**Note :** (i) Answer **any five** questions including question number **45** which is **compulsory**.

(ii) Answer to theory questions should **not** exceed **150** words each.

**45.** (அ) 31.03.2009 அன்றைய இருப்பாய்வின் படி பற்பல கடனாளிகள் ₹ 1,25,000. சரிக்கட்டுதல்கள் :

(i) ₹ 5,000 வராக்கடன் போக்கெழுதுக.

(ii) பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

(iii) கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக. சரிக்கட்டுப்பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

**அல்லது**

(ஆ) ஒற்றைப் பதிவு முறையில் கணக்கேடுகளைப் பராமரித்து வரும் திரு. பரணியின் இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| விவரங்கள் | சனவரி 1. 2001 | டிசம்பர் 31.2001 |
|---|---|---|
| | ₹ | ₹ |
| அறைகலன் | 4,000 | 4,000 |
| சரக்கிருப்பு | 10,000 | 12,000 |
| பற்பல கடனாளிகள் | 12,000 | 8,000 |
| ரொக்கம் | 20,000 | 40,000 |
| பற்பல கடனீந்தோர் | 4,000 | 7,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 2,000 | 1,000 |
| கடன் (பற்று) | - | 2,000 |
| முதலீடுகள் | - | 8,000 |

அவ்வாண்டில் அவரது எடுப்பு ₹ 4,000. அறைகலன் மீது 10% தேய்மானம் அனுமதிக்க. 2001-ம் ஆண்டிற்கான இலாப நட்ட அறிக்கையை தயார் செய்க.

(a) The Trial Balance shows on 31.03.2009 as Sundry debtors ₹ 1,25,000.

Adjustments :

(i) Bad debts to be written off ₹ 5,000.

(ii) Provide at 5% provision for bad and doubtful debts.

(iii) Provide at 2% provision for discount on debtors.

Pass adjusting entries and show how these items will appear in the final accounts.

**OR**

(b) The balance appears in Mr. Bharani's books which are kept in Single Entry basis are mentioned below :

| Particulars | January 1, 2001 | December 31, 2001 |
|---|---|---|
| | ₹ | ₹ |
| Furniture | 4,000 | 4,000 |
| Stock | 10,000 | 12,000 |
| Sundry Debtors | 12,000 | 8,000 |
| Cash | 20,000 | 40,000 |
| Sundry Creditors | 4,000 | 7,000 |
| Bills receivable | 2,000 | 1,000 |
| Loan [Dr] | - | 2,000 |
| Investment | - | 8,000 |

His drawings during the year were ₹ 4,000. Depreciate furniture by 10%. Prepare a statement showing profit for the year 2001.

46. தேய்மானம் நீக்க வேண்டியதன் தேவைகள் யாவை ?

What are the needs for providing depreciation ?

47. ரொக்கத் திட்டப்பட்டியல் என்றால் என்ன? ரொக்கப் பெறுதல்கள், ரொக்கச் செலுத்தல்களுக்கு தலா நான்கு எடுத்துக் காட்டுகள் தருக.

What is Cash Budget ? Give four examples each for cash receipts and cash payments.

48. நிலை முதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

What are the differences between fixed capital method and fluctuating capital method ?

**49.** ஸ்டார் வரையறு நிறுமம் 2006 ஏப்பரல் 1 அன்று ₹ 5,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. குறைந்து செல் இருப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் விலக்கப்பட்டது. அவ்வியந்திரம் பயனற்று போனதால் 31.3.2009 அன்று ₹ 3,80,000-க்கு விற்கப்பட்டது.

ஆண்டு தோறும் மார்ச் 31 அன்று கணக்குகள் முடிக்கப் பெறுகின்றன எனக்கொண்டு இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கு ஆகியவற்றை மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.

STAR Limited Company purchased a machinery for ₹ 5,00,000 on 1st April 2006. It is depreciated at 10% per annum on diminishing balance method. Having become obsolete it was sold for ₹ 3,80,000 on 31.3.2009.

Prepare Machinery Account and Depreciation Account for three years assuming that the Accounts are closed on 31st March every year.

**50.** பின்வரும் விவரங்களைக் கொண்டு :

(அ) மொத்த லாப விகிதம்

(ஆ) நிகர லாப விகிதம்

(இ) சரக்கிருப்பு விற்பனை விகிதம் முதலியவற்றை கணக்கிடுக.

| | ₹ | | ₹ |
|---|---|---|---|
| விற்பனை | 1,50,000 | இறுதிச் சரக்கிருப்பு | 31,000 |
| விற்ற பொருளின் அடக்க விலை | 1,20,000 | கடனாளிகள் | 15,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 29,000 | நிர்வாகச் செலவுகள் | 15,000 |

From the following details calculate :

(a) Gross profit ratio

(b) Net profit ratio

(c) Stock turnover ratio

| | ₹ | | ₹ |
|---|---|---|---|
| Sales | 1,50,000 | Closing stock | 31,000 |
| Cost of goods sold | 1,20,000 | Debtors | 15,000 |
| Opening stock | 29,000 | Administration Expenses | 15,000 |

51. சங்கர் கண்ணன் என்ற கூட்டாளிகள் முறையே சமமாக இலாப நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 01.04.2005 அன்று அவர்களுடைய முதல், முறையே ₹ 60,000, ₹ 40,000 ஆகும். முதல் மீது ஆண்டுக்கு 6% வட்டி வழங்க ஒப்புக் கொண்டு உள்ளனர். எடுப்புக்கள் மீது வட்டி ஆண்டுக்கு 8% நிர்ணயித்துள்ளனர். எடுப்புத் தொகை சங்கர் ₹ 6,000, கண்ணன் ₹ 4,000. எடுப்பு மீது வட்டி சங்கர் ₹ 240, கண்ணன் ₹ 160. சங்கர் ஆண்டுக்கு ₹ 8,400 ஊதியமாகவும்; கண்ணன் ₹ 4,000 கழிவாகவும் பெறுகின்றனர். மேற்கண்ட சரிக்கட்டுதல்களுக்கு முன் தொழிலின் 2006. மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகரலாபம் ₹ 54,000. இலாப நட்டப் பகிர்வுக் கணக்கையும், அவர்களின் முதல் மாறுபடும் முதல் எனக்கொண்டு கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும் தயாரிக்க.

Shankar and Kannan are partners sharing profits and losses equally. Their capitals on 01.04.2005 were ₹ 60,000 and ₹ 40,000 respectively. Interest on capital is agreed at 6% p.a. Interest on drawings is fixed at 8% p.a. The drawings of the partners were ₹ 6,000 and ₹ 4,000 respectively. Interest on drawings were for Shankar ₹ 240 and for Kannan ₹ 160. Shankar is entitled to a salary of ₹ 8,400 p.a. and Kannan is entitled to get a commission of ₹ 4,000. The Net profit of the firm before making the above adjustments was ₹ 54,000 for the year ended on 31$^{st}$ March, 2006. Prepare the Profit and Loss Appropriation Account and Capital Account of the partners assuming that their capital was fluctuating.

52. மூன் வரையறு நிறுமம் முற்றும் அழைக்கப்பெற்ற ₹ 100 முகமதிப்புடைய 500 பங்குகளை இறுதி அழைப்பு ₹ 20 செலுத்தாத காரணத்தால் ஒறுப்பிழப்பு செய்தனர். இதில் 300 பங்குகளை பங்கொன்று ₹ 80 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறு வெளியீடு செய்தது. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து பங்கு ஒறுப்பிழப்பு கணக்கு மற்றும் முதலினக் காப்பு கணக்கு தயார் செய்க.

Moon Ltd. Company forfeited 500 equity shares of ₹ 100 each fully called up on which the final call of ₹ 20 has not been paid. Out of these 300 shares were reissued at ₹ 80 each fully paid up.

Give necessary Journal entries and prepare Ledger Accounts for Forfeited Shares Account and Capital Reserve Account.

[ திருப்புக / Turn over

## பகுதி - ஈ / PART - D

குறிப்பு : **எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும் இவற்றுள் 53-வது வினாவிற்கு **கட்டாயம்** விடையளிக்க வேண்டும். **3x20=60**

**Note :** Answer **any three** questions including question number 53 which is **compulsory**.

**53.** (அ) திரு. சக்தி தனது கணக்கேடுகளை ஒற்றைப் பதிவு முறையில் வைத்துள்ளார். கீழ் கண்ட விவரங்களில் இருந்து 2006 மார்ச் 31 - ம் நாளோடு முடியும் ஆண்டிற்கான வியாபார இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க.

| | 01.04.2005 | 31.03.2006 |
|---|---|---|
| சரக்கிருப்பு | 50,000 | 25,000 |
| பற்பல கடனாளிகள் | 1,25,000 | 1,75,000 |
| அறைகலன் | 5,000 | 5,000 |
| ரொக்கம் | 12,500 | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | 87,500 |

மற்ற விவரங்கள் :

| | ₹ |
|---|---|
| பெற்ற தள்ளுபடி | 7,500 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| பல்வகைச் செலவுகள் | 17,500 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 2,25,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,67,500 |
| எடுப்புகள் | 20,000 |
| விற்பனைத் திருப்பம் | 7,500 |
| கொள்முதல் திருப்பம் | 2,500 |
| ரொக்க விற்பனை | 2,500 |

**அல்லது**

(ஆ) சுரேஷ், தினேஷ், முகேஷ் எனும் கூட்டாளிகள் முறையே 3 : 2 : 1 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 31, டிசம்பர் 2006 ஆம் நாளைய அவர்களது இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு :

31.12.2006 ஆம் நாளைய அவர்களது இருப்புநிலைக்குறிப்பு

| பொறுப்புகள் | | ₹ | சொத்துக்கள் | ₹ |
|---|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | | 25,000 | ரொக்கம் | 63,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டு | | 15,000 | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | 10,000 |
| பொதுக்காப்பு | | 30,000 | பற்பல கடனாளிகள் | 30,000 |
| முதல் கணக்குள் : | | | சரக்கிருப்பு | 42,000 |
| சுரேஷ் | 80,000 | | அறைகலன் | 15,000 |
| தினேஷ் | 50,000 | | கட்டிடம் | 80,000 |
| முகேஷ் | 40,000 | 1,70,000 | | |
| | | 2,40,000 | | 2,40,000 |

பின்வரும் பகிர்வுகளுக்குப் பிறகு 2007, ஜனவரி 1 அன்று முகேஷ் கூட்டாண்மையில் இருந்து விலகினார்.

(i) நற்பெயர் ₹ 30,000 என்ற மதிப்பில் ஏடுகளில் தோற்றுவிப்பது.

(ii) சொத்துக்களின் மதிப்பு கீழ்க்கண்டவாறு மதிப்பிடப்பட்டன.

சரக்கிருப்பு ₹ 50,000, கட்டிடம் ₹ 1,00,000.

(iii) அறைகலன் மீது ₹ 3,000 தேய்மானம் நீக்குவது.

(iv) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹ 1,000 உருவாக்குவது.

(v) முகேஷ் என்பவருக்கு சேரவேண்டிய தொகை உடனடியாகச் செலுத்துவது.

மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்குகள், புதிய கூட்டாண்மையின் இருப்புநிலைக்குறிப்பு ஆகியவற்றை தயார் செய்க.

[ திருப்புக / Turn over

(a) Mr. Shakthi maintained his books of account on Single Entry System. From the following details prepare Trading, Profit and Loss Account for the year ending 31.3.2006 and a Balance Sheet as on that date :

| | 01.04.2005 | 31.03.2006 |
|---|---|---|
| Stock | 50,000 | 25,000 |
| Sundry Debtors | 1,25,000 | 1,75,000 |
| Furniture | 5,000 | 5,000 |
| Cash | 12,500 | 20,000 |
| Sundry Creditors | 75,000 | 87,500 |

Other details :

| | ₹ |
|---|---|
| Discount received | 7,500 |
| Discount allowed | 5,000 |
| Sundry expenses | 17,500 |
| Cash paid to sundry creditors | 2,25,000 |
| Cash received from sundry debtors | 2,67,500 |
| Drawings | 20,000 |
| Sales return | 7,500 |
| Purchase return | 2,500 |
| Cash sales | 2,500 |

**OR**

(b) Suresh, Dinesh and Mukesh were partners of a firm sharing profits and losses in the ratio of 3 : 2 : 1. Their Balance Sheet as on 31st December 2006 is as follows :

Balance Sheet as on 31st December 2006

| Liabilities | | ₹ | Assets | ₹ |
|---|---|---|---|---|
| Sundry Creditors | | 25,000 | Cash | 63,000 |
| Bills payable | | 15,000 | Bills receivable | 10,000 |
| General Reserve | | 30,000 | Sundry debtors | 30,000 |
| Capital Accounts | | | Stock | 42,000 |
| Suresh | 80,000 | | Furniture | 15,000 |
| Dinesh | 50,000 | | Buildings | 80,000 |
| Mukesh | 40,000 | 1,70,000 | | |
| | | 2,40,000 | | 2,40,000 |

Mukesh retired from the partnership on 1st January 2007. On the following terms :

(i) Goodwill of the firm was to be valued at ₹ 30,000.

(ii) Assets are to be valued as under :

Stock ₹ 50,000, Building ₹ 1,00,000.

(iii) Furniture was to be depreciated by ₹ 3,000.

(iv) A provision for doubtful debts be created at ₹ 1,000.

(v) Mukesh was to be paid off at once.

Show Revaluation Account, Capital Accounts and Balance Sheet of the reconstituted firm.

[ திருப்புக / Turn over

**54.** 31.3.1998 அன்று திரு. உதயகுமார் ஏடுகளில் இருந்து எடுக்கப்பட்ட இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. 1998, மார்ச் 31 - ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இறுதிக் கணக்குகள் தயார் செய்க.

| பற்று இருப்புகள் | ₹ | வரவு இருப்புகள் | ₹ |
|---|---|---|---|
| எடுப்புகள் | 40,000 | முதல் | 2,00,000 |
| வங்கியில் ரொக்கம் | 17,000 | விற்பனை | 1,60,000 |
| கை ரொக்கம் | 65,000 | பற்பல கடனீந்தோர் | 45,000 |
| கூலி | 10,000 | | |
| கொள்முதல் | 20,000 | | |
| சரக்கிருப்பு (01.04.1997) | 60,000 | | |
| கட்டிடம் | 1,00,000 | | |
| பற்பல கடனாளிகள் | 44,000 | | |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 29,000 | | |
| வாடகை | 4,500 | | |
| கழிவு | 2,500 | | |
| பொதுச் செலவுகள் | 8,000 | | |
| அறைகலன் | 5,000 | | |
| | 4,05,000 | | 4,05,000 |

கீழ் காணும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்:

(i) 31.3.1998 அன்று சரக்கிருப்பின் மதிப்பு ₹ 40,000

(ii) முதல் மீது வட்டி 6% அனுமதிக்க வேண்டும்

(iii) எடுப்புகள் மீது வட்டி 5% அனுமதிக்க வேண்டும்

(iv) கொடுபட வேண்டிய கூலி ₹ 1,000

(v) முன் கூட்டி செலுத்திய வாடகை ₹ 500

The following are the balance extracted from the books of Mr. Udhayakumar as on 31.3.1998. Prepare Trading and Profit and Loss Account and the Balance Sheet as on 31.3.1998.

| Debit Balances | ₹ | Credit Balances | ₹ |
|---|---|---|---|
| Drawings | 40,000 | Capital | 2,00,000 |
| Cash at Bank | 17,000 | Sales | 1,60,000 |
| Cash in hand | 65,000 | Sundry Creditors | 45,000 |
| Wages | 10,000 | | |
| Purchases | 20,000 | | |
| Stock (01.04.1997) | 60,000 | | |
| Buildings | 1,00,000 | | |
| Sundry Debtors | 44,000 | | |
| Bills receivable | 29,000 | | |
| Rent | 4,500 | | |
| Commission | 2,500 | | |
| General Expenses | 8,000 | | |
| Furniture | 5,000 | | |
| | 4,05,000 | | 4,05,000 |

The following adjustments are to be made :

(i) Stock on 31.3.1998 was ₹ 40,000.

(ii) Interest on capital at 6% to be provided.

(iii) Interest on drawings at 5% to be provided.

(iv) Wages yet to be paid ₹ 1,000.

(v) Rent prepaid ₹ 500.

55. பின்வரும் குளோபல் வரையறு நிறுமத்தின் இருப்புநிலைக் குறிப்பில்
(i) புற - அகப் பொறுப்புகள் விகிதம்,
(ii) உரிமையாளர் விகிதம்,
(iii) நடப்பு விகிதம்,
(iv) நிலைச் சொத்துக்கள் விற்பனை விகிதம் ஆகியவற்றை கணக்கிடுக.

2004 மார்ச் 31-ம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ₹ | சொத்துக்கள் | ₹ |
|---|---|---|---|
| பங்கு முதல் | 2,00,000 | நிலம் கட்டிடம் | 1,40,000 |
| காப்புகள் | 40,000 | பொறி இயந்திரம் | 80,000 |
| 6% கடனீட்டுப் பத்திரம் | 60,000 | அறைகலன் | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | சரக்கிருப்பு | 40,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 25,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 30,000 |
| | | பற்பல கடனாளிகள் | 80,000 |
| | | ரொக்கம் | 10,000 |
| | 4,00,000 | | 4,00,000 |

கூடுதல் தகவல் : அந்த வருடத்தில் கடன் விற்பனை : ₹ 4,80,000 :

From the following Balance Sheet of Global Company Ltd., Calculate :
(i) Debt. - equity ratio
(ii) Proprietory ratio
(iii) Current ratio
(iv) Fixed asset turnover ratio

Balance Sheet as on 31.03.2004

| Liabilities | ₹ | Assets | ₹ |
|---|---|---|---|
| Share Capital | 2,00,000 | Land and Building | 1,40,000 |
| Reserves | 40,000 | Plant and Machinery | 80,000 |
| 6% Debentures | 60,000 | Furniture | 20,000 |
| Sundry Creditors | 75,000 | Stock | 40,000 |
| Bills payable | 25,000 | Bills receivable | 30,000 |
| | | Sundry Debtors | 80,000 |
| | | Cash | 10,000 |
| | 4,00,000 | | 4,00,000 |

Additional information : Sales for the year ₹ 4,80,000.

**56.** கீழ்க்காணும் விவரங்களில் இருந்து 2006 ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்கான ரொக்கத்திட்டப் பட்டியல் தயார் செய்க.

| மாதம் | கடன் விற்பனை | கடன் கொள்முதல் | செலவுகள் |
|---|---|---|---|
| | ₹ | ₹ | ₹ |
| 2006 ஏப்பரல் | 4,50,000 | 3,20,000 | 40,000 |
| 2006 மே | 5,10,000 | 2,10,000 | 30,000 |
| 2006 ஜூன் | 6,00,000 | 3,00,000 | 36,000 |
| 2006 ஜூலை | 7,20,000 | 3,40,000 | 24,000 |
| 2006 ஆகஸ்ட் | 6,30,000 | 4,20,000 | 28,000 |

**கூடுதல் தகவல்கள் :**

(i) 2006 ஜூன் 1-ம் நாளைய ரொக்க இருப்பு ₹ 4,00,000

(ii) வாடிக்கையாளருக்கு அனுமதித்த கடனின் காலம் ஒரு மாதம்

(iii) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்

(iv) செலவுகள் ஒரு மாதம் கடந்தபின் செலுத்தப்படுகிறது

(v) ஜூலை மாதத்தில் ₹ 1,00,000-க்கு இயந்திரம் விற்கப்பட உள்ளது.

From the following information, prepare a Cash Budget for June, July and August 2006.

| Month | Credit sales | Credit purchase | Expenses |
|---|---|---|---|
| | ₹ | ₹ | ₹ |
| 2006 April | 4,50,000 | 3,20,000 | 40,000 |
| 2006 May | 5,10,000 | 2,10,000 | 30,000 |
| 2006 June | 6,00,000 | 3,00,000 | 36,000 |
| 2006 July | 7,20,000 | 3,40,000 | 24,000 |
| 2006 August | 6,30,000 | 4,20,000 | 28,000 |

Additional Information :

(i) Opening Cash Balance as on 1st June 2006 is ₹ 4,00,000.

(ii) Period of credit allowed to customers - one month.

(iii) Period of credit allowed by suppliers - two months.

(iv) Lag in payment of Expenses is one month.

(v) Sale of Machinery ₹ 1,00,000 in July.

**57.** அரவிந்த் வரையறு நிறுமம் பங்கொன்றுக்கு ₹ 100 வீதம் 40,000 பங்குகளை ₹ 10 முனைமத்துடன் பின்வருமாறு செலுத்தும் வண்ணம் வெளியிட்டது.

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது | ₹ 30 |
| ஒதுக்கீட்டின் போது (முனைமம் ₹ 10 உட்பட) | ₹ 40 |
| முதல் அழைப்பின் போது | ₹ 20 |
| இறுதி அழைப்பின்போது | ₹ 20 |

50,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன 10,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

இரு அழைப்புகளும் விடுக்கப்பட்டு பெற வேண்டிய அனைத்து தொகையும் முறையாகப் பெறப்பட்டது.

குறிப்பேட்டுப் பதிவுகள் தருக. மேலும் வங்கி க/கு கணக்கு, பங்கு முதல் கணக்கு, பத்திர முனைம கணக்கு தயாரித்து இருப்பு நிலைக் குறிப்பையும் தயாரிக்க.

Arvind Company Ltd. issued 40,000 shares of ₹ 100 each at a premium of ₹ 10 each payable as follows :

| | |
|---|---|
| On Application | ₹ 30 |
| On Allotment (including premium ₹ 10) | ₹ 40 |
| On First Call | ₹ 20 |
| On Final Call | ₹ 20 |

The company received applications for 50,000 shares. Applications for 10,000 shares were rejected. Both the calls were made and all the money duly received.

Pass Journal Entries. Prepare Bank Account, Share Capital Account, Securities Premium Account and the Balance Sheet.

- o O o -